[2015 செப்டம்பர் 15

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 268, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

268—

வீட்டுமனைப் பட்டா

***38559 திரு. மு. முருகன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி வட்டம், கீழமுந்தல் மற்றும் மேலமுந்தல் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், பெரியகுளம் குரூப் கீழமுந்தல் மற்றும் மேலமுந்தல் பகுதிகளில் புல எண்கள் 572/5பி1 விஸ்தீரணம் 0.17.0 எக்டேர், 572/5A விஸ்தீரணம் 0.18.0 எக்டேர் மற்றும் 572/5பி2 விஸ்தீரணம் 0.18.0 எக்டேர் ஆக மொத்தம் 0.53.0 எக்டேர் இடமானது கிராமக் கணக்கில் சர்க்கார் தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சை தரிசு எனத் தாக்கலாகியுள்ளது. மேற்படி இடத்தில் சுமார் 54 மீனவக் குடும்பங்கள் குடியிருந்து வருகின்றனர். மேற்படி இடம் சர்க்கார் தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சை தரிசாக உள்ளதால், கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து, வீட்டுமனைப் பட்டாக்களை வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

2015 செப்டம்பர் 15]

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைந்த புகழால் உயர்ந்து நிற்கும் மனிதநேய தலைவியே! கனிவும், கம்பீரமும் கலந்திட்ட காவியத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) கல்லாமையையும், இல்லாமையையும் போக்க எந்நாளும் உழைக்கும் கலைமகளின் திருவுருவமே! முதுகுளத்தூர் தொகுதியில், கமுதி வட்டத்தில், செங்கபடையில் உலகிலேயே மிகப்பெரிய சூரிய மின் திட்டத்தை ரூபாய் 5,500 கோடியில் அறிவித்து, அறிவித்த முப்பதே தினங்களில் திட்டத்தை முழுவீச்சில் தொடங்கி, படித்த இளைஞர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு தந்த தாயே! உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக சுமார் இரண்டரை இலட்சம் கோடி முதலீட்டில் தொழிற்சாலைகளை ஈர்த்து, தென் மாவட்டத்திற்கு முக்கியத்துவம் தந்து, பல சலுகைகளையும் அறிவித்த தாயே! முதுகுளத்தூர் தொகுதி, கமுதி வட்டத்தில், கொண்ரலாம்பட்டியில் 24,000 கோடி ரூபாயில் 4,000 மெகா வாட் அனல் மின் நிலையம் அறிவித்த தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுக்கு எனது தொகுதியின் சார்பாகவும், எனது மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி வட்டத்தைச் சேர்ந்த கடற்கரையோர கீழமுந்தல் மற்றும் மேலமுந்தல் மீனவ கிராம மக்கள் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்கின்றார்கள். 54 குடும்ப மக்கள் வனத் துறைக்குச் சொந்தமான இடத்திலே பல ஆண்டுகாலம் தற்காலிகமாக வசித்து வந்தனர். அதிகாரிகளினுடைய நெருக்கடியினால், அருகில் உள்ள நஞ்சை நிலத்தில் வீடு கட்டிக்கொண்டிருக்கின்றனர். நஞ்சை நிலத்தை வகைப்பாடு செய்து, நத்தம் என்று அறிவித்து, பட்டா வழங்க வேண்டும் என்று 54 குடும்பங்கள் கோரிக்கை வைத்தன. அதனை ஆய்வு செய்து, பட்டா வழங்க ஆவன செய்யப்படும் என்று கூறி, அவர்களின் கோரிக்கையினை நிறைவேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக என்னுடைய நன்றியைச் சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.*

திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *தன்னலமில்லாமல் சேவை செய்யும் மனிதப் புனிதமே! பாரதம் காக்க மீண்டெழுந்த சரித்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரை கோடி சிப்பாய் படை கொண்டு, உச்சங்கள் எட்டுகின்ற ஓங்குபுகழ் சிற்பமே! ஒப்பிட்டுச் சொல்லமுடியாத உலகத்து அதிசயமே! எங்கள் அன்னையே! ஓர் ஆலயமே! மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 50-ல் உள்ள சத்தியா நகர், எம்.ஜி.ஆர் நகர், பெரியசாமி நகர் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே, நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு அம்மா அவர்கள் அரசினுடைய நிலையான கொள்கையாகும். அந்தவகையில், வீட்டுமனை ஒப்படை செய்யத் தகுந்த நிலம் எங்கெங்கு உள்ளதோ, அதையெல்லாம் ஏழையெளியவர்களுக்கு கருணை உள்ளத்தோடு வீட்டுமனையாக வழங்கி வருகின்றார்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்தவகையிலே, இந்த 4 ஆண்டுகால புனித ஆட்சியிலே, இதுவரை இல்லாதவகையிலே, 7 இலட்சம் என்ற இலக்கைத் தாண்டி, 8 இலட்சத்து 52 ஆயிரம் வீட்டுமனைகளை வழங்கி, ஏழையெளியோருடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கின்ற ஒரே முதலமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 செப்டம்பர் 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, அனுப்பானடி அம்பேத்கர் காலனியில் 210 பேருக்கும், அதேபோல, கீழ்மதுரை காலனியில் 110 தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் கேட்டு ஏற்கெனவே தொடர்ச்சியாக கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து மாவட்ட நிருவாகமும் அவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆனாலும், காலதாமதம் ஆகக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, இவர்களுக்கு பட்டா வழங்க முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனை ஒப்படை செய்வதற்கு தகுதியான நிலம் தமிழகத்தில் எங்கெங்கு உள்ளதோ அதையெல்லாம் தாய் உள்ளத்தோடு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு 8½ இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வாரி வழங்கியிருக்கின்றது. அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, தகுதியுள்ள நிலமாக இருப்பின் வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ் வரையறைக்குட்பட்டிருப்பின் உடனடியாக போர்க்கால அடிப்படையிலே அந்தப் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2015 செப்டம்பர் 15

269—

தார்ச் சாலை சீரமைத்தல்

***61985 திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதி, சுருளியாறு நீர் மின் நிலையம் வழியாகச் செல்லும் குள்ளப்பகவுண்டன்பட்டி-லோயர் கேம்ப் பிரதான தார்ச் சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்ற தாரக மந்திரத்தோடு அமைதி, வளம், வளர்ச்சி என ஒவ்வொரு நாளும் மக்கள் பணி ஒன்றே என் வாழ்வின் இலட்சியம் எனத் தன்னிகரில்லா திட்டங்களைத் தந்து, நல்லாட்சி புரிந்துவரும், தினம், தினம் நான் வணங்கும் குல தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதி, சுருளியாறு நீர் மின் நிலையம் வழியாகச் செல்லும் குள்ளப்பகவுண்டன்பட்டி-லோயர் கேம்ப் பிரதான தார்ச் சாலையைச் சீரமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயமான மாநாடு, 11 நாடுகள், 23 நிறுவனங்கள், 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 2.43 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு, சுமார் 5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு போன்ற ஒப்பற்ற முதலீட்டு மாநாட்டை நடத்தி (மேசையைத் தட்டும் ஒலி) சாதனை படைத்த எங்கள் குடும்ப தெய்வம், காவல் தெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்*